Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ்Mirror

FRIDAY, JULY 11 2025

வெள்ளிக்கிழமை 11, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 281 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



# பால் டீயின் விலை அதிகரிப்பு

பால் டீயின் விலையை ரூ.10 அதிகரிப்பதாக அகில இலங்கை உணவகம் மற்றும் பார் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இறக்குமதி செய்யும் பால் மாவின் விலையை இறக்குமதியாளர்கள் அதிகரித்ததால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை உணவகம் மற்றும் பார் உரிமையாளர்கள் சங்கத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். பால் மா இறக்குமதியாளர்கள் இறக்குமதி செய்யும் பால் மா 1 கிலோ கிராம் பாக்கெட்டின் விலையை ரூ.250 ஆல் மற்றும் 400 கிராம் பால் மா பாக்கெட்டின் விலையை ரூ.100 ஆல் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# இலங்கைக்கு 30% வரி

பிரேசில் நாட்டுக்கு 50 சதவீத வரியை விதித்துள்ள அமெரிக்கா, இலங்கை, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட 7 நாடுகளுக்கு 30 சதவீதம் வரை வரி விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து 8 நாடுகளின் தலைவர்களுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அதிகாரபூர்வ கடிதங்கள், புதன்கிழமை (09) அன்று அனுப்பி வைத்துள்ளார்.

இந்த நாடுகள் மீதான அனைத்து புதிய வரிகளும் ஆகஸ்ட் 1 முதல் அமுலுக்கு வரும் என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதன்படி பிரேசில் நாட்டுக்கு 50 சதவீதம் வரி விதிப்பதாக அறிவித்துள்ளார்.

மேலும், அல்ஜீரியா, ஈராக், லிபியா மற்றும் இலங்கை நாடுகளுக்கு 30 சதவீத வரியும் புருனே மற்றும் மால்டோவா நாடுகள் மீது 25 சதவீத வரியும் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு 20 சதவீத வரியும் விதிக்கப்படுவதாக ட்ரம்ப் அறிவித்தார்.

நியாயமற்ற வர்த்தக ஏற்றத்தாழ்வுகளை' சரிசெய்யும் முயற்சியாக இந்த வரிவிதிப்பு இருக்கும் என ட்ரம்ப் தெரிவித்தார். பிரேசில் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோ மீது வழக்குத் தொடரப்பட்டதற்குப் பதிலடியாக, அந்நாட்டின் மீது 50 சதவீத வரி விதிக்கப்பட்டதாக அமெரிக்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஆதரவாளரான பிரேசில் முன்னாள் ஜனாதிபதி பொல்சனாரோ, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மோசடி செய்து ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள முயன்றதாக வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கின் விசாரணையைக் கைவிட வேண்டும் என தற்போதைய ஜனாதிபதி லூயிஸ் இனாசியா லூலா டி சில்வாவுக்கு ட்ரம்ப் கடிதம் எழுதியிருந்தார். இதனையடுத்து இந்த புதிய வரிவிதிப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ட்ரம்பின் 50 சதவீத வரிவிதிப்பு குறித்து லூலா டி சில்வா வெளியிட்ட எக்ஸ் பதிவில், “பிரேசில் இறையாண்மை கொண்ட நாடு,

தொடர்ச்சி P2

# கன்னியா அத்துமீறிய கட்டிட பணி இடை நிறுத்தம்



**வடமலை ராஜ்குமார்**

கன்னியாவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் அத்துமீறிய கட்டிடப் பணி இடை நிறுத்தப்பட்டுள்ளது.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் இடம்பெற்று வருகின்ற அத்துமீறிய கட்டிடம் தொடர்பாக திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேச சபை தவிசாளர் வெள்ளைத்த ம்பிசுரோஸ்குமாரின் நேரடி கள ஆய்வின் பின்னர் கட்டிட வேலை நிறுத்தம்.

தொடர்ச்சி P2

# கோவை குண்டுவெடிப்பு

# 28 ஆண்டுகளுக்குப் பின் டெய்லர் ராஜா சிக்கினார்

கோவையில் 1998ஆம் ஆண்டு நடந்த தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தின் முக்கிய குற்றவாளிகளில் ஒருவரான டெய்லர் ராஜா, 28 ஆண்டுகளுக்குப் பிறகு வியாழக்கிழமை (ஜூலை 10) சத்தீஸ்கரில் கைது செய்யப்பட்டார்.

கோவையில், 1998ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்துக்கு வந்திருந்த பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் எல்.கே.அத்வானி, ஆர்.எஸ்.புரம் டி.பி. ரோடு சந்திப்பில் பேச இருந்த மேடைக்கு அருகே குண்டு வெடித்தது.

தொடர்ச்சி P2

# “மிகக் குறைந்த அளவிற்கு குறைக்க முடிந்தது”



அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு புதிதாக விதிக்கப்படும் 30 சதவீத பரஸ்பர வரி, அமெரிக்காவிற்கு அந்தப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான தற்போதைய வரிகளுடன் கூடுதலாக இருக்கும் என்று நிதி அமைச்சின் செயலாளர் டாக்டர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

அதே வரி மற்ற பிராந்திய நாடுகளுக்கும் சேர்க்கப்படும் என்றும், அவ்வாறு சேர்க்கப்பட்ட பிறகு சேர்க்கப்படும் விலைகளின் அடிப்படையில் இலங்கையின் ஏற்றுமதி போட்டித்தன்மையை பராமரிக்க அரசாங்கம் நம்புகிறது என்றும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2



# அமெரிக்க வரிக் கொள்கை குறித்து அவசர பேச்சு

அமெரிக்க அரசாங்கத்தால் விதிக்கப்பட்டிருக்கும் புதிய தீர்வை வரிக் கொள்கை தொடர்பாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும் இலங்கை தூதுக்குழுவிற்கும் இடையே வியாழக்கிழமை (10) காலை ஜனாதிபதி அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜெயந்த பெர்னாண்டோ, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.ஏ.விமலேந்திராஜா, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹூலங்கமுவ ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பால்மா விலை எகிறியது



பால்மா இறக்குமதியாளர்கள் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அதிகரிப்பை அறிவித்துள்ளனர்

அதன்படி, 400 கிராம் பக்கெட் 100 ரூபாவினால் உயர்த்தப்பட்டுள்ளது என்பதை இலங்கை பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த ஆறு மாதங்களாக சர்வதேச பால்மா சந்தையில் தொடர்ந்து விலை உயர்வு ஏற்பட்டதையடுத்து, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த அதிகரிப்புகள் இருந்தபோதிலும், நாட்டில் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதற்காக

தொடர்ச்சி P2

# “சுயநல பேச்சுக்கு கொடுக்கும் விலை”



அமெரிக்காவிற்கான ஏற்றுமதிகளுக்கு குறைந்த வரிகளை விதிக்க இலங்கை தவறியதற்கு, பலவீனமான மற்றும் சுயநல பேச்சுவார்த்தைகளே காரணம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கைப் பொருட்களுக்கு சமீபத்தில் விதிக்கப்பட்ட 30% அமெரிக்க வரி குறித்து பதிலளித்த பிரேமதாச,

“இலங்கை ஏற்றுமதிகள் மீது 30% அமெரிக்க வரி விதிப்பது என்பது எமது மோசமான பேச்சுவார்த்தைக்கு நாம் கொடுக்கும் விலை. எங்கள் ஈகோ ஒவ்வொரு பங்காளியையும், ஒவ்வொரு நிபுணர் கையையும் தேடுவதைத் தடுத்தது, இப்போது கிட்டத்தட்ட 3 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதிகள் இடையில் சிக்கி உள்ளன.

தொடர்ச்சி P2

# விகாரைக்கு எதிராக தையிட்டியில் ஆர்ப்பாட்டம்

**மு.தமிழ்ச்செல்வன்**


யாழ்ப்பாணம், தையிட்டியில் பொது மக்களின் காணிகளில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று வியாழக்கிழமை(10) அன்று முன்னெடுக்கப்பட்டதுடன், குறித்த ஆர்ப்பாட்டம் மாலை ஆறு மணி வரை நீட்டித்தது. விகாரை அகற்றப்பட்டு, காணிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் நோக்கத்தோடு நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் காணி உரிமையாளர்கள்,

தொடர்ச்சி P2



# ‘அனுர’ வை ‘அருண’ வாக மாற்றிய ட்ரம்ப்

இலங்கை ஏற்றுமதிகளுக்கு 30 சதவீத வரி விதிப்பை அறிவிக்கும் கடிதத்தில், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை ‘அருண’ குமார திசாநாயக்க என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தற்செயலாக குறிப்பிட்டுள்ளார்.



His Excellency
Aruna Kumara Dissanayake
President of the Democratic Socialist Republic of Sri Lanka
Colombo

வெள்ளை மாளிகையின் அதிகாரப்பூர்வ கடித தலைப்பில் ஜூலை 9ஆம் திகதியிட்டு அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தில், இலங்கை ஜனாதிபதியின் பெயரில் தவறான எழுத்துப்பிழை உள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# இலங்கைக்கு 30% வரி

சுயாட்சி கொண்ட நாடு. எனவே, நாங்கள் வெளியில் இருந்து வரும் எந்தவொரு அச்சுறுத்தலையும் ஏற்கமாட்டோம். ஆட்சிக் கவிழ்ப்பைத் திட்டமிடுவதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிரான நீதித்துறை நடவடிக்கைகள், பிரேசில் நீதித்துறையின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவை. எனவே, இந்த அமைப்புகள் எந்தவொரு அச்சுறுத்தல்களுக்கும் உட்பட்டது அல்ல.

பிரேசில் உடனான அமெரிக்காவின் வர்த்தக உறவில் ஏற்றத்தாழ்வுகள் இருந்ததாகத் தெரிவிப்பது தவறானது. கடந்த 15 ஆண்டுகளில், பிரேசில் உடன் அமெரிக்கா 410 பில்லியன் டாலர்கள் வணிகம் செய்துள்ளது என்று அமெரிக்காவின் தரவுகள் காட்டுகின்றன. அமெரிக்கா எங்கள் மீது புதிய வரிகளை விதித்தால், பிரேசில் அதற்கான பதிலடியைப் பிரேசிலின் பொருளாதார சட்டம் மூலம் கொடுக்கும்" என தெரிவித்துள்ளார்.

# கன்னியா அத்துமீறிய கட்டிட பணி இடை நிறுத்தம்



கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட மூன்று ஏக்கர் காணியிலேயே அப்பகுதிக்குத் தொடர்பு இல்லாத சிலருடைய அத்துமீறி கட்டிடம் அமைக்கப்படுவதாகப் பிரதேச சபை தவிசாளரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து, தவிசாளர் வெள்ளை தம்பி சுரேஷ்குமார் உப-தவிசாளர் வைரவநாதன் உட்பட சபையின் உத்தியோகத்தர்கள் அவ்விடத்திற்கு புதன்கிழமை (09) சென்று நிலைமை ஆராய்ந்து கட்டிடப் பணியை உடனடியாக நிறுத்தியுள்ளனர்.

# 28 ஆண்டுகளுக்குப் பின் டெய்லர் ராஜா சிக்கினார்

தொடர்ந்து, கோவையில், 14 இடங்களில் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன.

அதில், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என, 58 பேர் கொல்லப்பட்டனர். 231 பேர் படுகாயம் அடைந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். நாட்டை உலுக்கிய இச்சம்பவத்தை விசாரிக்கும் வழக்கு, கோவை மாநகர பொலிஸிடம் இருந்து, சிறப்பு புலனாய்வு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது.

விசாரணைக்கு பின், தடை செய்யப்பட்ட அல்-உம்மா இயக்க நிறுவனர் பாஷா உட்பட, 166 பேரை பொலிஸார் கைது செய்தனர். இதில் தொடர்புடைய பலரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் ஊடாக தண்டிக்கப்பட்டனர். இன்னும் சிலர் சிறையில் உள்ளனர். எனினும், இந்த சம்பவத்தில் தொடர்புடைய இருவர் மட்டும் பொலிஸில் சிக்காமல் தலைமறைவாகி விட்டனர்.

இந்நிலையில், முக்கிய குற்றவாளிகளில் ஒருவரான டெய்லர் ராஜா, 28 ஆண்டுகளுக்குப் பிறகு சத்தீஸ்கரில் ஜூலை 10 அன்று கைது செய்யப்பட்டார் டைலர் ராஜாவை பொலிஸார் கோவை அழைத்துச் சென்றனர்.

# "மிகக் குறைந்த அளவிற்கு குறைக்க முடிந்தது"



அமெரிக்காவால் முன்னர் அறிவிக்கப்பட்ட 44 சதவீத வரி வீதத்தை பிராந்தியத்தில் 30 சதவீதமாக மிகக் குறைந்த அளவிற்குக் குறைக்க முடிந்தது என்றும், முன்னர் அறிவிக்கப்பட்ட வரி வீதங்களுடன் ஒப்பிடும்போது இலங்கை மிக உயர்ந்த வரி குறைப்பைப் பெற்றுள்ளது என்றும் கூறினார்.

# விகாரைக்கு எதிராக தையிட்டியில் ஆர்ப்பாட்டம்

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், சமத்துவக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், சட்டத்தரணி காண்டீபன், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# பால்மா விலை எகிறியது



உள்ளூர் விலைகள் இதுவரை நிலையாகவே இருந்துள்ளன.

இதேவேளை, 400 கிராம் பக்கெட்டின் விலை ரூ.1,200ஆக திருத்தப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு கிலோ கிராம் பக்கெட் ரூ.250 ஆக உயர்ந்துள்ளது.

சர்வதேச சந்தை போக்குகள் செங்குத்தான அதிகரிப்பை உத்தரவாதம் செய்தாலும், நுகர்வோர் மீதான சுமையைக் குறைக்க அவர்கள் சரிசெய்தலை சுமார் 9%ஆக மட்டுப்படுத்தியதாக சங்கம் குறிப்பிட்டுள்ளது.

உலகளாவிய பால்மா விலையில் எதிர்காலத்தில் ஏற்படும் எந்தவொரு குறைப்பும் உடனடியாக உள்ளூர் நுகர்வோருக்கு வழங்கப்படும் என்றும் அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

# "சுயநல பேச்சுக்கு கொடுக்கும் விலை"




" சிக்கலான யதார்த்த உலக பேச்சுவார்த்தைகளுக்கு 'பாடப்புத்தக நிபுணர்களை' நம்பியிருப்பதன் ஆபத்துகள் குறித்த ஒரு சம்பவமாக அவர் இந்நிலைமையை விவரித்தார்.

ஏப்ரல் மாதத்தில் 44% ஆக இருந்த அதிகரித்த கட்டணங்களின் தாக்கம் குறித்து ஏற்றுமதியாளர்கள் மற்றும் வர்த்தக அமைப்புகளிடையே அதிகரித்து வரும் கவலைகளுக்கு மத்தியில் இந்தக் கருத்துக்கள் வந்துள்ளன.

வரிகள் குறைக்கப்பட்ட பின்னரும் இலங்கையைப் பொறுத்த வரையில், அவை இன்னும் கணிசமாக அதிகமாகவே உள்ளன என்றார்.

# புலிகளின் பதுங்கு குழியை தோண்டும் பணி ஆரம்பம்



தமிழீழ விடுதலைப்புலிகள் பயன்படுத்திய பாரியளவிலான நிலக்கீழ் பதுங்குகுழியைத் தோண்டும் நடவடிக்கை முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதியில் புதன்கிழமை (09) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மந்துவில் கிராமத்தில், புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அருகில் உள்ள காணி ஒன்றில், போர் காலத்தில், விடுதலைப்புலிகளின் தலைவர் மற்றும் தளபதிகள் பயன்படுத்தினர் என்று கருதப்படும் நிலக்கீழ் பதுங்குகுழியைத் தோண்டும் நடவடிக்கை, புதுக்குடியிருப்பு பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டு ஏக்கர் வரையிலான குறித்த காணி, விடுதலைப்புலிகளின் முகாமாகக் காணப்பட்டது.

இந்தக் காலட்டத்தில், விடுதலைப்புலிகளின் தலைவர் மற்றும் தளபதிகள் உள்ளிட்டவர்கள் சந்திப்புக்களை மேற்கொள்வதற்காகப் பாரியளவில் நிலக்கீழ் பதுங்குகுழி ஒன்று அமைக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு போருக்கு பின்னர், குறித்த காணியில், கண்ணிவெடி அகற்றும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். இந்த நிலக்கீழ் பதுங்குகுழி சுமார் 20 அடி ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க விசா செலவு உயரும்




அமெரிக்க அரசு விசா நிபந்தனைகள், கட்டுப்பாடுகளை தீவிரப்படுத்தியுள்ள நிலையில், விசா கட்டணத்தையும் இரண்டரை மடங்கு அளவுக்கு உயர்த்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்டு ட்ரம்ப் இந்தாண்டு ஜனவரியில் பதவியேற்றதில் இருந்து விசா வழங்குவதில் பல நிபந்தனைகளையும், கட்டுப்பாடுகளையும் கொண்டு வந்துள்ளார்.

இந்நிலையில், 'பிக் பியூட்டிபுல் பில்' எனப்படும் அரசு செலவீனம் தொடர்பான மசோதா சமீபத்தில் நிறைவேறியது. இதற்கு ஜனாதிபதி ட்ரம்பும் ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்த சட்டத்தின்படி, விசா கட்டணங்கள் உயர்த்தப்படுகின்றன.

இதன்படி, குடியேற்றம் அல்லாத, மாணவர், தொழில், சுற்றுலா போன்ற விசாக்களுக்கான கட்டணங்களுடன், 'இன்டகிரிட்டி' எனப்படும் நேர்மை கட்டணமாக, 250 டொலர் கூடுதலாக வசூலிக்கப்படும். மேலும் சில கூடுதல் கட்டணங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவை, 2026இல் இருந்து நடைமுறைக்கு வரும் என்று கூறப்படுகிறது. இது அனைத்து நாடுகளுக்கும் பொருந்தும். இந்த கூடுதல் கட்டணம், நிபந்தனைகளின் அடிப்படையில் நாடு திரும்பும்போது திருப்பி தரப்படும்.

இந்த கட்டணங்கள், விலைவாசியுடன் தொடர்புடையவை என்று கூறப்பட்டுள்ளது. அதனால், ஆண்டுக்கு ஆண்டு மாறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'அனுர' வை 'அருண' வாக மாற்றிய ட்ரம்ப்

இது சமூக ஊடகங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வருகிறது, பல பயனர்கள் இந்தத் தவறைச் சுட்டிக்காட்டி கருத்து தெரிவித்துள்ளனர். அதனையடுத்து அந்த கடிதத்தில், திருத்தங்களை மேற்கொண்டு, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க என குறிப்பிட்டு அனுப்பிவைத்துள்ளார்.

# செம்மணி அகழ்வு பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு எதிர்வரும் 21ஆம் திகதி மீள ஆரம்பமாகவுள்ளது.

முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட அகழ்வுப்பணிகளில் மொத்தமாக 65 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு அவை முழுவதுமாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

"தடயவியல் அகழ்வாய்வுத்தளத் தளம் ஒன்று" என அடையாளப்படுத்தப்பட்ட குழியிலிருந்து 63 முழுமையான என்புத் தொகுதிகளும், "தடயவியல் அகழ்வாய்வுத்தளத்தின் இரண்டு என பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியிலிருந்து இரண்டு முழுமையான என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

இரண்டாம் கட்ட அகழ்வின்15ஆம் நாள் அகழ்வு பணிகள், வியாழக்கிழமை (10) முன்னெடுக்கப்பட்டன.

## ரூ.1 மில்லியன் மதிப்புள்ள அழகுசாதனப் பொருட்களை

# அழிக்க உத்தரவு

எந்தவொரு செல்லுபடியாகும் ஆவணங்களும் இல்லாமல் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டு சேமித்து வைக்கப்பட்டிருந்த சுமார் ரூ.1 மில்லியன் மதிப்புள்ள வாசனை திரவியங்கள் மற்றும் பொடி லோஷன்களை பறிமுதல் செய்து அழிக்க மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெல்லம்பிட்டியவில் உள்ள ஒரு வீட்டில் பொருட்களைச் சேமித்து வைத்திருந்த தொழிலதிபர் ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நீதிமன்றத்தால் அவருக்கு ரூ.20,000 அபராதம் விதிக்கப்பட்டது.

ஜூன் 28, 2025 அன்று நுகர்வோர் விவகார சபையின் (CAA) அதிகாரிகள் நடத்திய சோதனையின் போது, 35 வெவ்வேறு பிராண்டுகளைச் சேர்ந்த 4,079 வாசனைத் திரவியங்கள் மற்றும் தோல் கிரீம்கள் அடங்கிய இந்த கையிருப்பு பறிமுதல் செய்யப்பட்டது.



தேவையான இறக்குமதியாளர் விவரங்கள் அல்லது விநியோகத்தர் ரசீதுகள் இல்லாமல் சந்தைக்கு வெளியிடப்படவுள்ள அழகுசாதனப் பொருட்களை சட்டவிரோதமாக சேமித்து வைப்பது தொடர்பான இரகசியத் தகவலைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை தொடங்கப்பட்டது.

சோதனையின் போது, தொழிலதிபர் பொருட்களை சட்டப்பூர்வமாக இறக்குமதி செய்ததையோ அல்லது கையகப்படுத்தியதையோ உறுதிப்படுத்தும் எந்த ஆவணங்களையும் சமர்ப்பிக்க முடியவில்லை. அதைத் தொடர்ந்து ஜூலை 8ஆம் திகதி மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது, இது இந்த வாரம் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு வழிவகுத்தது.

சந்தையில் தீங்கு விளைவிக்கும், ஆவணப்படுத்தப்படாத பொருட்களைச் சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்கு எதிராகத் தொடர்ந்து உறுதியான நடவடிக்கை எடுத்து வருவதாக CAA தெரிவித்துள்ளது. செல்லுபடியாகும் இறக்குமதியாளர் அல்லது உற்பத்தியாளர் தகவல்கள் இல்லாத விநியோகத்தர்களிடமிருந்து பொருட்களை வாங்கவோ விற்கவோ வேண்டாம் என்று சில்லறை விற்பனையாளர்களை சபை வலியுறுத்தியுள்ளது. மேலும், இதுபோன்ற சரிபார்க்கப்படாத பொருட்களை வாங்குவதைத் தவிர்க்குமாறு நுகர்வோருக்கு அறிவுறுத்தியுள்ளது.





சென்.பீட்டர்ஸ் படுகொலை

# 30ஆவது ஆண்டு நினைவேந்தல்

புகஜிந்தன்

நவாலி சென். பீட்டர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 30ஆம் ஆண்டு நினைவு தினம் புதன்கிழமை(09) மாலை சென். பீட்டர்ஸ் தேவாலயத்தில் நினைவு கூரப்பட்டது.

சென். பீட்டர்ஸ் தேவாலயத்தில் பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றதுடன் அதனை தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் மலர் தூவி சுடரேற்றி உயிரிழந்தவர்களுக்கு உணர்வுப்பூர்வமாக அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09ஆம் திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும், நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப்படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 135ற்கும் மேற்பட்டோர் பலியாகியமை குறிப்பிடத்தக்கது.


நினைவேந்தலின் போதும் புலனாய்வாளர்களின் கெடுபிடிகள் அதிகம் இருந்ததை அவதானிக்க முடிந்தது.













# வேன் விபத்தில் 8 பேர் காயம்



பி.கேதீஸ்

மாத்தறையிலிருந்து நுவரெலியாவுக்கு இளைஞர்கள் குழுவை ஏற்றிச் சென்ற வேன் ஒன்று, வீதியை விட்டு விலகி 70 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் எட்டு பேர் பலத்த காயங்களுக்குள்ளாகி நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து வியாழக்கிழமை (10) அதிகாலை 5 மணியளவில் ஹட்டன்-நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா டெஸ்போட் தோட்ட பகுதியில் நிகழ்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்களை டெஸ்போட் பகுதி பிரதேச வாசிகள் மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

வேனின் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கம் காரணமாகவே இவ்விபத்து ஏற்பட்டதாகவும், விபத்தில் வேனுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டதாகவும் விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சுகாதாரத் துறையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும்



எப்.முபாரக்

சுகாதாரத் துறையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பவும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

கந்தளாய் தள வைத்தியசாலைக்கு புதன்கிழமை (9) மாலை திடீர் விஜயத்தை மேற்கொண்ட அவர், வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நேரடியாகக் கண்டறிந்தார்.

இந்த விஜயத்தின் போது, கந்தளாய் தள வைத்தியசாலையின் மருந்துப் பற்றாக்குறையைத் தடுப்பதற்கான முக்கிய அறிவிப்பை அமைச்சர் வெளியிட்டார்.

அடுத்த ஆண்டுக்குத் தேவையான மருந்துகளை இந்த ஆண்டிலேயே இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்ததுடன் இதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மருந்துத் தட்டுப்பாட்டை முன்கூட்டியே தவிர்த்து, நோயாளிகளுக்குத் தடையற்ற மருந்து விநியோகத்தை உறுதிப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

மேலும், சுகாதாரத் துறையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பவும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அருண் ஹேமச்சந்திர உறுதியளித்தார்.

குறிப்பாக மருத்துவர்கள், தாதிமார்கள் மற்றும் ஏனைய மருத்துவ ஊழியர்களின் பற்றாக்குறை சுகாதார சேவைகளில் பெரும் சவாலாக இருப்பதை அவர் ஒப்புக்கொண்டார். இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படுவதன் மூலம் சுகாதார சேவைகளின் தரத்தை மேம்படுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விஜயத்தின் போது கந்தளாய் தள வைத்தியசாலை அத்தியட்சகர் உதார குணதிலக்க மற்றும் வைத்திய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## இருட்டு வீதியில் இருந்து

# இளைஞனின் சடலம் மீட்பு



வேறு இடத்தில் கொலை செய்யப்பட்டு வீசப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இளைஞனின் சடலம் வியாழக்கிழமை (10) கண்டெடுக்கப்பட்டதாக ஹோமாகம பொலிஸ் தெரிவித்துள்ளது.

சுமார் 35 வயது மதிக்கத்தக்க அந்த இளைஞனின் தலையில் ஆயுதத்தால் தாக்கப்பட்டதற்கான காயம் இருப்பதாகவும், கழுத்தில் சிறிது வீக்கம் இருப்பதாகவும், கழுத்துக்கு அருகில் இரத்தக் கறை இருப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இன்னும் திறக்கப்படாத தொடர்புடைய மாற்றுப் பாதை இரவில் மிகவும் இருட்டாக இருப்பதால், ஒரு வாகனத்தில் உடலை எடுத்துச் சென்று, வீதியோரத்தில் நிறுத்தி, இந்த இடத்தில் வீசியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# போதைப்பொருள் வியாபாரி கைது

எஸ்.எம்.எம்.முர்ஷித்

நீண்ட காலமாக போதைப் பொருள் வியாபாரம் செய்து வந்த வியாபாரி வியாழக்கிழமை (10) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸார் மற்றும் இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் கூட்டு முயற்சியினாலும் அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் பொலன்னறுவையை சேர்ந்த பிரபல போதைப்பொருள் வியாபாரியான சந்தேக நபர் புனாணை, ரிதிதென்ன பிரதேசத்தில் வைத்து போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 5,320 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் 100 கிராம் கேரளா கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த வியாபாரி கொழும்பு மற்றும் ஏனைய பிரதேசங்களிலிருந்து போதைப் பொருட்களைக் கொண்டு வந்து கல்குடா பிரதேசத்தில் வினியோகித்து வந்துள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரையும் சான்றுப்பொருட்களையும் சட்ட நடவடிக்கைக்காக நீதிமன்றில் ஆஜர்படுத்த வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொக்குவிலில் 'வெட்டு' காசு

யாழ்ப்பாணம், கொக்குவில் சந்தை தொடர்பான அறிவித்தல் ஒன்றை நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் வெளியிட்டுள்ளார்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில் பொதுச் சந்தையில் கடல் உணவுகளை வெட்டுவதற்கு மற்றும் இறால் சுத்தம் செய்வதற்குமான கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, 1 கிலோ கிராம் மீன் வெட்டுவதற்கு 50 ரூபாய், 1 கிலோ கிராம் நண்டு வெட்டுவதற்கு 50 ரூபாய்,

1 கிலோ கணவாய் வெட்டுவதற்கு 100 ரூபாய் 1 கிலோ கிராம் சுறா மீன் வெட்டுவதற்கு 100 ரூபாய்,

1 கிலோ கிராம் திருக்கை வெட்டுவதற்கு 50 ரூபாய் , 1 கிலோ கிராம் பெரிய இறால் சுத்தப்படுத்துவதற்கு 100 ரூபாய்,

1 கிலோ கிராம் சிறிய இறால் சுத்தப்படுத்துவதற்கு 120 ரூபாய் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேலதிகமாக கட்டணம் எதுவும் அறவிட முடியாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகமாகக் கட்டணங்கள் அறவிடப்படுமாயின், 021 222 2700 அல்லது 021 221 2178 என்ற இலக்கங்களூடாக பொதுமக்கள் முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம்.

விசாரணைகள் மூலம் மேலதிக கட்டணம் அறவிடப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டால், உரியவர்களுக்கு எதிராக பிரதேச சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மாற்று ஏற்றுமதி சந்தைகளை இலங்கை தேட வேண்டும்

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 44 சதவீத வரி விதிப்பதாக அறிவித்திருந்த அமெரிக்கா, அதனைத் திருத்தி, 30 சதவீதமாகக் குறைத்து, புதன்கிழமை (09) அன்று அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

அமெரிக்காவின் புதிய வரி விதிப்பால் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் விலை அதிகரிப்பதன் மூலம் அந்நாட்டுடனான வர்த்தகம் பாதிக்கப்படும். குறிப்பாக, இலங்கையின் பிரதான ஏற்றுமதியான ஆடைத் தொழிலில் கடுமையான வீழ்ச்சி ஏற்படலாம். இது இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பின்னடைவாக அமையும்.

அதிகரித்த வரி விதிப்பால், இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் விலையை அதிகரிக்கும், இதன் காரணமாக அமெரிக்க சந்தையில் இலங்கைப் பொருட்களின் போட்டித்தன்மை குறையும். குறிப்பாக, இலங்கையின் பிரதான ஏற்றுமதியான ஆடைத் தொழிலில், அமெரிக்க சந்தையில் இதன் தாக்கம் அதிகமாக இருக்கும்.

ஏனெனில், இலங்கையின் மொத்த ஆடை உற்பத்தியில் 64 சதவீதம் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வரி விதிப்பால், இலங்கை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதில் பெரும் பின்னடைவை சந்திக்கும். இதனால், இலங்கையின் ஏற்றுமதி வருவாய் குறையும், அந்நிய செலாவணி கையிருப்பு பாதிக்கப்படும், மேலும் வேலையின்மையும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் மொத்த மொத்த ஏற்றுமதி வருவாயான 12 பில்லியன் அமெரிக்க டொலர்களில் சுமார் 25% அமெரிக்காவிற்கு ஒதுக்கப்படுகின்றது.

இலங்கையின் மொத்த ஏற்றுமதி, தோராயமாகச் சொன்னால், 12 பில்லியன் ஆகும். அதில், 25%, அதாவது, ஆண்டுதோறும் சுமார் 3 முதல் 3.4 பில்லியன் வரை, நாங்கள் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்கிறோம். ஒரு நாடாக, அமெரிக்கா எங்கள் மிகப்பெரிய வாங்குபவராக மாறியுள்ளது.

பொதுவான விருப்பத்தேர்வு அமைப்பு (GSP) சலுகையின் கீழ், குறைந்த வரி சதவீதத்தில் அமெரிக்காவிற்கு பொருட்களை இலங்கை ஏற்றுமதி செய்கிறது.அந்த நேரத்தில், GSP இன் கீழ், சுமார் 3,200 முதல் 3,400 வகையான பொருட்களை ஏற்றுமதி செய்ய முடிந்தது. ஆனால், ஆடைகளுக்கு GSP சலுகை எங்களிடம் இல்லை. பொதுவான விருப்பத்தேர்வு அமைப்பு பிளஸ்.(GSP+) மட்டுமே ஆடைகளுக்குக் கிடைக்கிறது. பின்னர், இந்தப் புதிய முறையின் மூலம், GSP சலுகையின் கீழ் நாங்கள் ஏற்றுமதி செய்யும் அனைத்து பொருட்களும் 30 சதவீத வரிக்கு உட்பட்டதாக இருக்கும்

இதுபோன்ற வரி விதிப்பால், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி குறையும் அபாயம் உள்ளது. அமெரிக்காவின் இந்த வரி விதிப்பு, இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஒரு சவாலாக அமையும்.

இந்த வரி விதிப்பைச் சமாளிக்க, இலங்கை மாற்று ஏற்றுமதி சந்தைகளைத் தேட வேண்டியது அவசியம், மேலும், உள்நாட்டுத் தேவையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அமெரிக்காவுடனான வர்த்தக உறவுகளைப் பேணுவதற்கு மாற்று வழிகளை ஆராய வேண்டியதும் அவசியமாகும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பிரதி உபகாரங்களை எதிர்பாராதவர்கள்,ஈ ஆசைகள் அற்றவர்கள், பிறருக்கு உதவுவதில் பரந்த மனம் உள்ளவர்களாக இருப்பார்கள். தாங்கள் கொடுத்ததை விளம்பரம் செய்யாதவர்கள். உண்மையான கொடையாளிகள்.

ஏழைகளுக்கு வலிந்து உதவிகளைச் செய்தாலும் அதை ஏற்றவர்கள், பின்னர் அவர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. சகல மக்களின் உழைப்பினால்தான் உலகம் வாழ்கின்றது. ஆனால், இன்னமும் ஏழை மக்களுக்கு உதவுபவர்கள் குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். மனிதர் ஒருவரில் ஒருவர் சார்ந்து வாழ்வது இயற்கையானது.

தனித்து இயங்க முடியாது. எனவே, சகலரையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உருவாக வேண்டும். எல்லோருக்கும் எல்லாமும் கிட்டாது; இல்லாதவன் பெறுமதி அற்றவன் இல்லை.

வாழ்க்கைச் சுழற்சி சாதாரணமானது. எதனை எவரும் முழுமையாக உணர்கின்றார்களா? அறிந்தும் அறியாதவர்கள் போல, வாழ்கின்றவர்களே அநேகமானவர்களாக இருக்கின்றார்கள். யதார்த்த உண்மையை உணர்க.

– பருத்தியூர் பாலவயிரவநாதன்

### பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை–28

# நெருக்கடிக்குள்ளாகும் மக்களும் அக்கறையற்ற அரசும்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1965இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள், குறிப்பாக மூன்று சமூக, பொருளாதார பிரச்சினைகளை அதிகப்படுத்தின வாழ்க்கைச் செலவு, வேலையின்மை மற்றும் வருமான ஏற்றத்தாழ்வுகள். கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச் செலவுக் குறியீடு (1952 - 100) 1967இல் 114.8 இலிருந்து 1970இல் 138.2ஆக அதிகரித்தது. அரசாங்கத்தின் விரிவாக்க நிதியுதவி காரணமாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதத்தை விட இரண்டு மடங்கு அதிகரித்து பண விநியோகத்தால் உருவாக்கப்பட்ட பணவீக்க அழுத்தம் காரணமாக விலை உயர்வு ஏற்பட்டது. விலை உயர்வு கணிசமான முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், 1969-70 இலங்கை சமூக-பொருளாதார ஆய்வின்படி, 43% குடும்பங்கள் ரூ.200க்கும் குறைவான மாத வருமானத்தைப் பெற்றன, மேலும், இந்த வருமானக் குழு தங்கள் வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கை உணவுக்காகச் செலவிட்டது. இந்தக் குழுவில் முக்கால்வாசி பேர் கிராமப்புறங்களில் வசித்து வந்தனர். 1967இல் ரூபாயின் மதிப்பிழப்பு மற்றும் அந்நியச் செலாவணிக் கொள்கைத் தளர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1968ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்த திட்டமும் உள்நாட்டு விலை அளவை உயர்த்த பங்களித்தது.

1965 முதல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் நாட்டை வெளிநாட்டுக் கடன்களைச் சார்ந்திருக்கும் புதிய பாதைக்கு இட்டுச் சென்றன. நுகர்வு அளவைப் பாதுகாக்க வெளிநாட்டுக் கடன்கள் முக்கியமாக நம்பியிருந்தன. வெளிநாட்டு உதவியுடன் வளர்ச்சியில் விவேகமான சார்பு நிலை நிறைவேற்றப்பட்டவுடன், நாடு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கடன் சேவை ஆகியவற்றின் பிரிக்க முடியாத புதைகுழியில் நழுவியது என்பது தெளிவாகிறது. டிசெம்பர் 1967இல் அரசாங்கம் ரூபாயை 20% குறைத்தது, இதன் விளைவாகப் பிரிட்டிஷ் பவுண்டின் மதிப்பு 14% குறைந்தது. மதிப்பிழப்புடன் திருப்தி அடையாமல், அரசாங்கம் 'இறக்குமதிகளை தாராளமயமாக்குதல்' என்ற அறிவிக்கப்பட்ட நோக்கத்துடன் இரட்டை மாற்று விகிதத்தை ஏற்றுக்கொண்டது. உணவு மற்றும் பாரம்பரிய ஏற்றுமதிகள் போன்ற அத்தியாவசிய இறக்குமதிகள், தேயிலை, ரப்பர் மற்றும் தேங்காய் பொருட்கள் அதிகாரப்பூர்வ மாற்று விகிதத்தால் நிர்வகிக்கப்பட்டன. அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்கள், இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி இந்தப் புதிய விதிகளின்படி, நிர்வகிக்கப்பட்டது. முதலில், இது அதிகாரப்பூர்வ விகிதத்தை விட 44% அதிகமாக இருந்தது, ஆனால், ஜூலை 1969இல் இது 55%ஆக அதிகரிக்கப்பட்டது.

1965-70 காலகட்டத்தில் அரசாங்கக் கொள்கைகள் தொடர்ச்சியான வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறைகளுக்கு வழிவகுத்தன. 1970இல் வாக்கில் ஆண்டு பற்றாக்குறை ரூ.723 மில்லியனாக அதிகரித்தது (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 5% முதல் 6% வரை). செலவினங்களுடன் ஒப்பிடும்போது, வருவாயின் வளர்ச்சி மெதுவாக இருந்தது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வரிகளிலிருந்து வருவாய் உண்மையில் குறைந்துவிட்டது, இருப்பினும், வணிக விற்றுமுதல் வரியிலிருந்து அதிகரிப்புகள் பதிவாகியுள்ளன. தொடர்ச்சியான செலவு அதிகரித்துக் கொண்டே இருந்தது. 1960-64இல் மொத்த செலவினத்தில் 38%ஆக இருந்த பரிமாற்றக் கொடுப்பனவுகளுக்கான செலவு 1965-70இல் 41%ஆக அதிகரித்தது. முக்கிய பொருட்கள் உணவு மானியம், உர மானியம், பொதுக் கடனுக்கான வட்டி, ஓய்வூதியங்கள், மாநில நிறுவனங்களுக்கான நிதி, உள்ளாட்சி அமைப்புகள் போன்றவை. இதற்கு நேர்மாறாக, பொருளாதார சேவைகளுக்கான செலவு, உள்கட்டமைப்பு மேம்பாடு, விவசாயம், நீர்ப்பாசனம், தகவல் தொடர்பு, உற்பத்தி போன்றவை - 1960 மற்றும் 1964க்கு இடையில் சராசரியாக 17% மட்டுமே இருந்தது, 1970ஆம் ஆண்டளவில் 15%ஆகக் குறைந்தது. இறுதியாக, சமூக சேவைகள் கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி, சமூகம் மற்றும் நலன்புரி சேவைகளுக்கான செலவும் 24% இலிருந்து 22%ஆகக் குறைந்தது.

வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, ஐ.தே.க. அரசாங்கம் வங்கி மற்றும் வங்கி அல்லாத மூலங்களிலிருந்து கடன் வாங்கியது. முக்கிய வங்கி அல்லாத மூலங்கள் ஊழியர் சேமலாப நிதி, விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதி மற்றும் காப்பீட்டுக் கழகத்தின் நிதிகள் அனைத்தும் பயன்பட்டன. மேற்கத்திய நாடுகளின் பண்ட உதவியால் உருவாக்கப்பட்ட எதிர் ரூபாய் நிதிகளும் பற்றாக்குறைகளை நிதியளிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன (1967-70இல் பற்றாக்குறையில் 38% வரை). கூடுதலாக, அரசாங்கம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையில் சுமார் 25% ஈடு செய்யும் வங்கிக் கடன்களைப் பெரிதும் நம்பியிருந்தது. 1969-70இல், விரிவாக்க நிதி ரூ.936 மில்லியன் வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையில் கிட்டத்தட்ட பாதியாக இருந்தது.

விலைவாசி உயர்வைச் சமாளிக்க அரசாங்கம் ஊதிய உயர்வுகளை அனுமதித்தது. ஆனால், விலைவாசி உயர்வுகள் இன்னும் அதிகமாக இருந்ததால் அந்த உயர்வுகள் பயனற்றதாக மாறியது. எனவே ஊதிய உயர்வுகள் உண்மையான ஊதியத்தை உயர்த்தவில்லை (இது பண ஊதியத்தின் உண்மையான வாங்கும் சக்தியை அளவிடுகிறது). வாழ்க்கைத் தரத்தை அளவிடுவதில் முக்கியமானது பண ஊதியம் அல்ல, உண்மையான ஊதியம்.

அனைத்து வகை ஊழியர்களுக்கும் பண ஊதியத்தில் கணிசமான அதிகரிப்புகள் இருந்தபோதிலும், அரச ஊதிய ஊழியர்கள் மற்றும் அரசுப் பள்ளி ஆசிரியர்களின் உண்மையான ஊதியத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது. மற்ற அரசு ஊழியர்களின் பண ஊதியம் 44.6% அதிகரித்த போதிலும், அவர்களின் உண்மையான ஊதியம் 11.4% மட்டுமே உயர்ந்துள்ளது. இந்த மதிப்பீடுகள் கொழும்பு நுகர்வோர் விலைக் குறியீட்டை அடிப்படையாகக் கொண்டவை, இது திருப்தியற்றது என்று அறியப்படுகிறது. உண்மையில், உண்மையான ஊதியம் சுட்டிக்காட்டப்பட்டதை விட கணிசமாகக் குறைந்துள்ளது.

இக்காலப்பகுதியில் வேலையின்மையும் மோசமாகி விட்டது. 1969-70 சமூக, பொருளாதார கணக்கெடுப்பின்படி, மொத்த தொழிலாளர் படையில் 14% அதாவது சுமார் 546,000 பேர் வேலையில்லாமல் இருந்தனர். அவர்களில் 69% பேர் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள். இன்னும் மோசமான விடயம் என்னவென்றால், வேலை இல்லாதவர்களில் 83% பேர் 18-24 வயதுக்குட்பட்டவர்கள், அவர்களுக்கு வேலையின்மை விகிதம் 35.6%ஆக இருந்தது. 1960களின் பிற்பகுதியில், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 120,000 புதிய நபர்கள் வேலை தேடத் தொடங்கினர். 1952ஆம் ஆண்டு நாட்டிற்கு விஜயம் செய்த உலக வங்கி, அந்த நேரத்தில் குறிப்பிடத்தக்க வேலையின்மை இல்லை என்று தெரிவித்தது. சிறிமாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் (1960-64) காலத்தில் ஏற்பட்ட பொருளாதார தேக்கநிலையுடன் வேலையின்மை ஒத்துப்போனது, மேலும், ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் (1965-70) கீழ் அது மோசமடைந்தது, அப்போது பொருளாதாரக் கொள்கை பெரிய மற்றும் பணக்கார விவசாயிகளின் முயற்சிகளைச் சுற்றி மையமாகக் கொண்டிருந்தது. 1963 மக்கள் தொகை கணக்கெடுப்பு, 3.2 மில்லியன் மொத்த பணியாளர்களில் 236,000 பேர் வேலையில்லாமல் இருந்ததை வெளிப்படுத்தியது, இது 8% வேலையின்மை விகிதமாகும். இவர்களில், 184,450 பேர் கிராமப்புறங்களில் இருந்தனர், இது மொத்த வேலையின்மையில் 77% ஆகும். 1969 அளவில், கிராமப்புற வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 379,200 ஆக உயர்ந்தது. வேலையில்லாதவர்களில் 25%க்கும் அதிகமானோர் குறைந்தபட்சம் க.பொ.த. சாதாரண தரத்தில் தேர்ச்சி பெற்றவர்கள், அதே நேரத்தில் மேலும், 45% பேர் நடுத்தர தரம் (சுமார் 8 முதல் 9 ஆண்டுகள்) பள்ளிப்படிப்பைப் பெற்றவர்கள். இதனால், 1960களின் பிற்பகுதியில் வேலையின்மை பெரும்பாலும் கிராமப்புறங்களில் இருந்தது, அதில் பெரும்பகுதி இளைஞர்களிடையே, குறிப்பாக படித்த இளைஞர்களிடையே காணப்பட்டது.

1950களின் பிற்பகுதியில் பள்ளிகளில் பயிற்றுவிப்பு ஊடகமாக தேசிய மொழிகளுக்கு மாறியதன் மூலம் கல்வி பரவலாகியது. ஆனால் பாடத்திட்டம் அப்படியே இருந்தது - வேலை தேடுபவர்கள் தொழில் சார்ந்த மற்றும் தொழில்நுட்ப ரீதியாக பயிற்சி பெற்ற பள்ளியை விட்டு வெளியேறுபவர்கள் அல்ல. 1967 ஆம் ஆண்டில், கலைப் படிப்புகளில் சேர 1,868 பல்கலைக்கழக மாணவர்களில் 1,247 பேர் ரூ.200க்கும் குறைவான மாத வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அரசாங்க பொருளாதாரக் கொள்கைகள் கல்வித் துறையில் இந்த வளர்ச்சியைக் கவனிக்கத் தவறிவிட்டன, இதன் விளைவாக வேலைவாய்ப்புக்கான தேவைக்கும் வாய்ப்புகளுக்கும் இடையில் இடைவெளி ஏற்பட்டது.

## கடிதங்கள்

### வியாபாரம் செய்ய பொருத்தமான இடம் தேவை



நாவலப்பிட்டி பொதுச் சந்தையின் வியாபாரிகள், தங்கள் வியாபாரத்தைப் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான முறையில் நடத்துவதற்குப் பொருத்தமான இடத்தை வழங்குமாறு அல்லது இந்த இடத்தை பொருத்தமான முறையில் தயார் செய்து தருமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

நாவலப்பிட்டி பழைய நகர சபை கட்டிடத்தில் சுமார் ஐந்து ஆண்டுகளாக ஞாயிற்றுக்கிழமை சந்தை நடத்தப்பட்டு வருவதாகவும், மழை நாட்களில் இந்த சந்தைப் பகுதி சேற்றுக் குட்டையாக மாறி வெள்ளத்தில் மூழ்குவதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

சரியான வடிகால் அமைப்பு இல்லாத நிலையில், தேங்கிய நீரினால் நுளம்புகள் பரவி வருவதாகவும், சில இடங்களில் குப்பைகள் குவிந்துள்ளதாகவும், பொலித்தீன்களால் மறைத்து அதன் கீழ் வியாபாரங்கள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் வியாபாரம் செய்வதற்காக நாவலப்பிட்டி நகர சபையினால் ஒரு நாளைக்கு ரூ.120 முதல் 700 வரை கட்டணம் வசூலித்தாலும், குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட எந்த வசதிகளும் வழங்கப்படவில்லை என்று வியாபாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

– ரஞ்சித் ராஜபக்ஷ




SLT–MOBITEL

# ஆய்வை முன்னெடுக்க புலமைப்பரிசில்

SLT-MOBITEL, சூழல் நிலைபேறாண்மைக்கான தனது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்யும் வகையில், கொழும்பு, வயம்ப மற்றும் ஊவா வெல்லஸ பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மூன்று பட்டம் பயிலும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கியுள்ளது. ஆய்வு அடிப்படையிலான புலமைப்பரிசில் வழங்கலினூடாக, இலங்கையில் நீல காபன் சுற்றுச்சூழல் அமைப்புகள் தொடர்பான கற்கைகளுக்கு ஆதரவளிக்கப்படுவதுடன், இந்த முக்கியமான சூழல் சொத்துகள் தொடர்பான ஆழமான புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

ஆய்வு என்பது கட்டாய அங்கமாக உள்ளடக்கப்பட்டுள்ள, இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களில் பதிவு செய்து கொண்டுள்ள சகல பட்டதாரி மாணவர்களுக்கும் SLT-MOBITEL புலமைப்பரிசில் திட்டத்தில் பங்கேற்க முடியும். இந்த முயற்சி ஒரு மதிப்புமிக்க களமாக செயல்படுவதுடன், இளம் ஆய்வாளர்கள் நீல கார்பன் சுற்றுச்சூழல் அமைப்புகளின் அறிவியல் ஆய்வுகள் மற்றும் புத்திசாலித்தனமான மேலாண்மைக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்க அதிகாரமும் அளிக்கிறது.

2024 ஆம் ஆண்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட புலமையாளர்கள் தங்கள் ஆய்வை முடிக்க நிதி உதவி பெற்றுள்ளதுடன், இந்த முக்கியமான பகுதியில் நேரடி அனுபவத்தைப் பெற்று அறிவை மேம்படுத்தியுள்ளனர். 250,000 ரூபாய் வரை மதிப்புள்ள ஒவ்வொரு உதவித்தொகையும், பெறுனர்களுக்கு நடைமுறை பயன்பாடுகளை ஆராயவும், நிலையான நடைமுறைகளை ஊக்குவிக்கவும், புதுமையான ஆராய்ச்சியில் ஈடுபடவும், அவர்களின் அறிவியல் கண்டு பிடிப்புகளை வெளியிடவும் வாய்ப்பளித்திருந்தது.

உயிரியல், சூழலியல், மறுசீரமைப்பு, பாதுகாப்பு மற்றும் நீல காபன் சுற்றுச்சூழல் அமைப்புகளின் நிலையான பயன்பாடு போன்ற பகுதிகளை ஆய்வு தலைப்புகள் உள்ளடக்கியிருந்தது. மேலும், இந்த சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கும் அவற்றை தங்கள் வாழ்வாதாரத்திற்காக நம்பியிருக்கும் உள்ளூர் சமூகங்களுக்கும் இடையிலான தொடர்புகளை பகுப்பாய்வு செய்ய மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

விண்ணப்பதாரர்கள் SLT-MOBITEL ஒன்லைன் போர்டல் வழியாக நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றி குறிப்பிட்ட அளவுகோல்களுடன் இணைக்கப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவுகளை சமர்ப்பிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டனர். தெரிவு செய்யப்பட்டவிண்ணப்பதாரர்கள் நேர்காணல்களுக்கு அழைக்கப்பட்டனர். அங்கு அவர்கள் நிபுணர்கள் குழுவின் முன் தங்கள் ஆராய்ச்சி முன்மொழிவுகளை சமர்ப்பித்தனர்.

இதுவரை பெறுனர்கள் *antifungal property exploration, total ecosystem carbon stock estimation* மற்றும்*saltmarsh vegetation characterization*போன்ற பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ளதாக SLT-MOBITEL குறிப்பிட்டுள்ளது.

இந்த புலமைப்பரிசில் திட்டத்தினூடாக, கல்விசார் சிறப்பை ஊக்குவித்தல், புத்தாக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் நீண்ட கால அடிப்படையில் சூழல் மற்றும் சமூக அனுகூலங்களை ஏற்படுத்தித் தரும் செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தல் போன்றவற்றுக்கான தனது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்திருந்தது. SLT-MOBITEL இன் சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) அர்ப்பணிப்புகளுக்கமைய அதன் அங்கமாக இந்த நடவடிக்கை அறிமுகம் செய்யப்பட்டதுடன், ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு (SDGs) பங்களிப்பு வழங்குவதாகவும் அமைந்துள்ளது.

கொமர்ஷல் வங்கி மற்றும் செனோக் இணைந்து

# விசேட சலுகைகள்



கொமர்ஷல் வங்கி மற்றும் செனோக் டிரேட் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு முயற்சியின் மூலம் உருவாக்கப்பட்ட நியாயமான லீசிங் தெரிவுகள் மூலம் கட்டிட நிர்மாணத் துறையில் உள்ள நிறுவனங்களுக்கு புதிய உபகரணங்களைப் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க கொமர்ஷல் வங்கியால் வழங்கப்படும் தனிப்பயனாக்கப்பட்ட லீசிங் பொதியின் கீழ், செனோக்கிலிருந்து JCB மற்றும் Kobelco வர்த்தகநாமங்களைக் கொண்ட நிர்மாணத்துறைக்கான சாதனங்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ள சிறப்பு சலுகைகள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இரு நிறுவனங்களும் கைச்சாத்திட்டுள்ளன.

இதனால் வழங்கப்படும் நன்மைகளில் சிறப்பு விலைகள் மற்றும் குறைந்த வட்டி வீதங்கள், கவர்ச்சிகரமான மற்றும் நியாயமான வாடகைகளுடன் தனிப்பயனாக்கப்பட்ட கட்டணத் திட்டங்கள் மற்றும் 50, 250 மற்றும் 500 மணிநேரங்களில் முதல் மூன்று சேவைகளுக்கு இலவசக்கட்டணம் ஆகியவை அடங்கும்.

செனோக் குழுமத்தின் தடமானது நிர்மாணத்துறைக்கான இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள், வர்த்தக வாகனங்கள், தானியங்கி வாகனங்கள், தேயிலை, ஓய்வு, முன் வார்ப்பு திட்டங்கள், புத்தாக்க எரிசக்தி, விஷேட திட்டங்கள் மற்றும் வாழ்க்கைத் துறை என, உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் பல்வேறு வர்த்தகத் துறைகளில் பரந்துள்ளது.

உலகின் முதல் 1,000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் முதலாவது வங்கியாக கொமர்ஷல் வங்கி திகழ்வதுடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் (CSE) வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது. தனியார் துறையின் மிகப்பாரிய கடன் வழங்குநராக விளங்கும் கொமர்ஷல் வங்கி, SME துறையினருக்கு பாரியளவில் கடனுதவி வழங்கும் கடன் வழங்குநராகவும் உள்ளது. மேலும் டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் திகழும் இவ்வங்கி இலங்கையின் முதலாவது 100% காபன்-நடுநிலைமையை பேணும் வங்கியாகும். கொமர்ஷல் வங்கி நாடளாவிய ரீதியில் மூலோபாய ரீதியாக அமைந்துள்ள கிளைகள் மற்றும் தானியங்கி இயந்திரங்களின் வலையமைப்பை செயற்படுத்தி வருகிறது.

# தாரமிழந்த தாய்

தரணியில் தோன்றிய நாள்முதல் தாயவள்
தாகம் தீர்த்திடத்தாய்ப்பால் ஊட்டினாள்
பக்கத் துணையதாய்ப் பாசமாய் வளர்த்தவள்.
பாதம் துதித்துனைப் போற்றி வணங்கினோம்..!

சிரித்து மகிழ்ந்து செழித்திடும் வாழ்வதும்
சிதறிடும் கூடுகள் சிதைந்திடும் விதியினால்
கட்டிய கணவனைக் கடவுள் பறிப்பினும்
காப்பவள் குஞ்சுகள் கடைசிவரையிலும்..!


தன்னுளச் சோர்வையும் தளருடல் சகலதும்
தள்ளி ஒதுக்கியே தொடராய் உழைப்பவள்
தன்கை நோக்கிடும் தன் சிறார் தேவையை
தவறாமல் துடிப்புடன் தீர்த்திடும் உத்தமி..!

பட்டப் பகலினில் பாடாய் அலையினும்
பாலகர் பசியினைப் போக்கிடப் பொங்கிடும்
போசனப் பங்கதைப் பகிர்ந்தவர் புசித்திடப்
பார்த்தே இன்பறும் பத்தினிப் பண்பினாள்

எஞ்சியுள்ள எவ்வுணவும் எள்ளளவும்
அளவளவாய் எல்லார் கைக்களும்
கவளமதாய் அன்றிரவு மிஞ்சிவரும்
பருக்கைகளை மெதுமெதுவாய் மென்றுண்டு
மிகையாகப் பாசாங்கு செய்து மிரளவைக்கும் பதிவிரதை


தன்னை மறந்தவளாய்த் தூங்கிச்
சுருண்டிடுவாள் தன்னிலையைச் சிந்திக்கத்
தானுமில்லை அவகாசம் பசியும் பகல்
முழுக்கப் பட்டகளை பரிதாபம் பொழுது
விடிந்து விட்டால் புதியதொரு எதிர்நீச்சல்

விதிசெய்த சதியதனால் விதவைகளாய்த் தம்
குடும்பம் தலைமேலே சுமக்கின்ற தியாகப்
பெருஞ்சுவ ர்கள் எம்மை வளர்த்தெடுப்போர்
எம் தாய்மார் பேரொளிகள் என்றும் மனம்
வாடாமல் எப்போதும் போற்றிடுவோம்..!



கலாநிதி மு.ந.சிவச்செல்வன்,
ஆக்லாந்து, நியூ சிலாந்து,

# காருண்யம் தோற்றதுடா



செம்மணி எனும் போதே
மெல்லமாய் இந் நெஞ்சு வலிக்கத்
தான் செய்கிறது..!

மனிதம் கடந்து
தீட்டப்பட்ட சதியில்
ஓர் இனம் உயிருடன்
புதையுண்ட சோகம்
இது..!

இன,மத,மொழி கடந்தது
‘மனிதம்’ என போற்றிட்ட
லங்காவிலா?
இவ் அவலம்..!

நாக்கூசுகிறது
நெஞ்சு ததும்புகிறது
கொடும் கயவர்
கள்ளமிலா பிஞ்சுக்களையும்
விட்டு வைக்க வில்லையே..!

எத்தனை கனவுகள்
கனவாகவே
மண்ணினுள் புதையுண்ட
சோகம் பாரடா..!

இத்துயர் எப்படி
ஏற்கும் எம்மோர்
ஆம் எம்மினத்தோர்
அல்லவோ இவை..!

யாவரும் மனிதர்
யாதும் ஒரே நீதி
என்ற விதி எப்படி
தடம் புரண்டது..!

அடக்கி ஆளும் வன்மர்கள் ஆள
முடக்கி புதைக்கப்பட
வேண்டுமா எம் இனம்

நீதி தா ஐ.நாவே
பச்சிளம் குழந்தையும் இங்கு
அப்பாவி பெண்களும் இங்கு மண்ணில்
எண்புகளாய்

இனி வரலாறு பேசட்டும்
உரிமைகள் மீளட்டும்
நீதி கிட்டட்டும்
உம் சொந்தங்களுக்கேனும்
இவ் ஆழ் துயர்
கொஞ்சமேனும் துயிலெட்டும்..!



முகமது ர:ஃபீக் சம்ஹறா
யாழ். பல்கலைக்கழகம்

# சித்திக்காய்



முகமது ர:ஃபீக் சம்ஹறா
யாழ். பல்கலைக்கழகம்

உயர்தரமாம்,
இரண்டரை ஆண்டுப்
படிப்பின் வழி
“சித்தி” எனும் பதம்
கை கூடவே,

பல்கலைக்கழகமாம்
பெரும் தவம்
அடைந்திடக்
காத்திருந்தோமே
கனாத் தோறும்..!

காத்திருந்த
நாழிகையும் எய்திட
பெரும் அவாக் கொண்டே
அடி எடுத்தோம்
புது அத்தியாயம்
துவங்கிடவே,

முகம் அறியா,
முகவரி அறியா,
நட்புப் பூக்களை
நேரிலே கண்டிட்டு
ஆரவாரமாய் நல
விசாரிப்புக்களோடு
அறிமுகமாகிடவே,

யாழ் அளித்த வரங்களோ
இவை என
வியந்திடச்
செய்திட்ட
ஆசான்களின் நேர்முகங்களும்
வேண்டா
வரங்களாய்

உலகறியா எம்மினத்தோருக்கு
கொஞ்சம்
ஆறுதலளிக்க
மறுக்கவில்லை
அக்கனங்கள்

‘அம்மம்மா’ என
வியக்கும் யாழின்
இயல் இசை நாடகமென
முத்தமிழும் ஒன்றிட

கலை உலகில்
நான் வியந்த
நிமிஷங்கள்
இன்னும் மனதோரம்
மிதந்திடவே..!

பாஷை மொழிகள்
இன்றும் பொருள்
அறியா திணறிடவே
இன மத மொழி கடந்தது
மனிதம் என
“மானிடத்தின் மகத்துவம்” கற்பித்தது
துவக்கத்திலே யாழ் வழி சொந்தங்கள்

இலை மறை காயாய்
அடக்கப் பட்ட
திறமைகள்
செம்மையுற வெளிக்கொணரச் செய்தது
பல்கலைக்கழக
“ஆசான் கூடம்” என்பதில்
பெரும் திருப்தி
இன்னும் இன்னுமாய்

எத்தனை எத்தனை
பேச்சாளர்கள்,
விவாதிகள்,
மகாகவிகள்,
எழுத்தாளர்கள்
என
அடுக்கிட்டே
புது அத்தியாயம்
படைத்திட நாடிட்டனரே..!

இவ் வழி செவ்வழி
யாம் அடைந்த
நெறி வழி
ஆக யாழோடு
நால்வருட பயணம்
இனிதாய் பயணித்திட
பெரும் பிரார்த்தனையோடு
இக் கவிக்கு
முத்தாய்ப்பு வைக்கின்றேன்..!

பங்களாதேஷ்

## விசாரணையில் மாட்டினால்

# ஹசீனாவுக்கு மரண தண்டனை?



பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கும், மூத்த அரசு அதிகாரி ஒருவருக்கும் இடையே நடந்த பழைய உரையாடலின் ஓடியோ ஒன்று வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு மாணவர் போராட்டங்கள் காரணமாக ஆகஸ்ட் 5 தனது பதவியை இராஜினாமா செய்து ஷேக் ஹசீனா இந்தியாவுக்கு தப்பி சென்றார். மாணவர் போராட்டங்களை ஒடுக்க ஷேக் ஹசீனா மனிதாபிமான மீறல் குற்றங்களை ஏவியதாக புதிதாக அமைந்த இடைக்கால அரசு குற்றம்சாட்டியது. இதுதொடர்பாக ஷேக் ஹசீனா மீது அந்நாட்டு நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் நடந்து வருகின்றன.

இந்நிலையில், தற்போது வெளியான ஓடியோவில், போராட்டம் நடத்தும் மாணவர்களை ஒடுக்க ஆபத்தான ஆயுதங்களைப் பயன்படுத்தவும், போராட்டக்காரர்களை எங்கு பார்த்தாலும் சுடவும் பாதுகாப்புப் படையினரிடம் ஹசீனா கூறுவதைக் கேட்க முடிகிறது.

பிபிசி உறுதிப்படுத்திய ஓடியோவின்படி, அரசாங்க எதிர்ப்பு போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துமாறு அவர் நேரடியாகக் கட்டளையிட்டார்.

இந்த ஓடியோ, ஜூலை 18ஆம் திகதியன்று டாக்காவில் உள்ள வங்கதேச பிரதமரின் அதிகாரப்பூர்வ இல்லமான கணபபனில் இருந்து செய்யப்பட்ட தொலைபேசி அழைப்பின் போது பதிவு செய்யப்பட்டது. இந்த அழைப்பிற்குப் பிறகு டாக்கா முழுவதும் இராணுவ நிலை துப்பாக்கிகள் மூலம் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக போலீஸ் பதிவுகளை மேற்கோள் காட்டி பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது.

போராட்டங்களின் போது நடந்த வன்முறையில் 1,400 பேர் வரை கொல்லப்பட்டதாக ஐ.நா. உண்மை கண்டறியும் குழு கண்டறிந்துள்ளது.

தடயவியல் ஆய்வாளர்களும் இந்த ஆடியோ உண்மையானது என்பதை உறுதிப்படுத்தினர். ஷேக் ஹசீனா தற்போது சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தில் இனப்படுகொலைக்காக விசாரணையில் உள்ளார்.

குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என கூறப்படுகின்றது.

அமெரிக்கா

## ட்ரம்ப் உத்தரவு எதிரொலி:

# 2,000 அதிகாரிகளை பணிநீக்கம் செய்யும் நாசா

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதில் இருந்து விண்வெளி துறையிலும், நாசாவின் 18 ஆயிரம் பணியாளர்களிடையேயும் திட்டமிடல், 2026 நிதியாண்டிற்கான பணிநீக்கம் மற்றும் முன்மொழியப்பட்ட பட்ஜெட் குறைப்பு காரணமாக குழப்பங்கள் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக டஜன் கணக்கான அறிவியல் திட்டங்கள் இரத்து செய்யப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அமெரிக்க தேசிய வானூர்தி மற்றும் விண்வெளி நிர்வாகத்தில் சுமார் 2,145 மூத்த ஊழியர்கள் மற்றும் பணியாளர்களை பணிநீக்கம் செய்ய டிரம்ப் நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

பணிநீக்கம் செய்யப்படும் பெரும்பாலான ஊழியர்கள் GS-13 முதல் GS-15 வரையிலான பதவிகளில், மூத்த நிலை அரசாங்க பதவிகளில் உள்ளவர்கள் என்றும் ஊழியர்களுக்கு முன்கூட்டியே பணி ஓய்வு வழங்கியும் ஏற்கெனவே இராஜினாமா செய்ய முன்வந்தவர்களை பணியில் இருந்த விடு பெற ஒப்புதல் வழங்கப்படுகிறது.

தகவலின்படி, 1,818 ஊழியர்கள் தற்போது அறிவியல் அல்லது மனித விண்வெளிப் பயணம் போன்ற முக்கிய பணிப் பகுதிகளில் பணியாற்றுகிறார்கள். மற்றவர்கள் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் பணிபுரிகிறார்கள்.

இதுகுறித்து செய்தி தொடர்பாளர் பெத்தானி ஸ்டீவன்ஸ் கூறுகையில், நாங்கள் அதிக முன்னுரிமை பெற்ற பட்ஜெட்டுக்குள் செயல்படுவதால், எங்கள் பணிக்கு நாசா உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அங்காரா

## துருக்கி ஜனாதிபதி பற்றி ஆபாச பதில்:

# க்ரோக் AI க்கு தடை விதித்த நீதிமன்றம்

உலகின் முன்னணி செல்வந்தரான எலான் மஸ்க்கின் எக்ஸ்(முன்பு ட்விட்டர்) நிறுவனம் அறிமுகப்படுத்திய க்ரோக் ஏஐ. உலகளவில் செயற்கை நுண்ணறிவு தளமான க்ரோக் ஏஐயின் பயன்பாடு அதிகரித்துள்ளது.


இந்நிலையில், துருக்கியில் க்ரோக் ஏஐக்கு தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

துருக்கி ஜனாதிபதி ரெசப் தையிப் எர்டோகன், அவரது மறைந்த தாயார் மற்றும் துருக்கியின் சில ஆளுமைகளுக்கு எதிராக க்ரோக் ஏஐ ஆபாசமான பதில்களை அளித்ததாக புகார் எழுந்தது. மேலும், நவீன துருக்கியேவின் தந்தை என அழைக்கப்படும் முஸ்தபா கெமால் அதாதுர்க் குறித்தும் அவதூறு பரப்பும் வகையில் பதிலளித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதுதொடர்பான வழக்கில், பொதுஒழுங்குக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதமாக பதில்களை கூறி வரும் க்ரோக் ஏஐக்கு, துருக்கி இணைய சட்டங்களின் அடிப்படையில் தடை விதித்து துருக்கி நீதிமன்றம் உத்தரவிட்டது.

நமீபியா

# பிரதமர் மோடிக்கு உயரிய விருது



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நமீபியா நாட்டின் உயரிய விருதான ஆர்டர் ஆப் தி மோஸ்ட் ஏன்சியன்ட் வெல்விட்ஸ்சியா மிராபிலிஸ்' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் விண்ட்ஹோக்கில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பிரதமர் மோடிக்கு, அந்நாட்டின் ஜனாதிபதி நெடும்போ நந்தி-தைத்வா இந்த விருதை வழங்கியுள்ளார்.

பிரேசிலில் நடைபெற்ற 17ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கடந்த 6, 7ஆம் தேதிகளில் உலக தலைவர்களுடன் கலந்துகொண்டு மோடி பேச்சுவார்த்தை நடத்தினார். இதைத் தொடர்ந்து நேற்று நமீபியாவுக்கு அவர் சென்றுள்ளார்.

இதன்போது, நமீபியா ஜனாதிபதியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தும் மோடி, அந்நாட்டு பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார்.

மேலும், பிரதமர் மோடிக்கு பிரேசிலின் உயரிய விருதான 'தி கிராண்ட் காலர் ஆப் தி நேஷன் ஆர்டர் ஆல் தி சதர்ன் கிராஸ்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

புதுடெல்லி

# "எனக்கு நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும்"



ஆம் ஆத்மி தலைவர் ஜாஸ்மின் ஷா எழுதிய 'கெஜ்ரிவால் மாடல்' புத்தகத்தின் பஞ்சாபி பதிப்பை வெளியிட்டபோது ஆம் ஆத்மி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் கருத்து ஒன்றை தெரிவித்தார்.

அதாவது, "எங்கள் அரசு ஆட்சிக்கு வந்ததில் இருந்து, நாங்கள் செயல்பட அனுமதிக்கப்படவில்லை, ஆனாலும், நாங்கள் செய்து காட்டினோம். ஆட்சி மற்றும் நிர்வாகத்திற்காக எனக்கு நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று நான் உணர்கிறேன்.

துணைநிலை ஆளுநரின் தொடர்ச்சியான இடையூறுகளுக்கு மத்தியிலும் நாங்கள் பணியாற்றினோம். மொஹல்லா கிளினிக்குகள், இலவச மின்சாரம், கல்வி சீர்திருத்தங்கள் அனைத்தும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் செய்யப்பட்டன. நெருக்கடிக்கு மத்தியிலும் ஆட்சி செய்ததற்காக எனக்கு அங்கீகாரம் கிடைக்க வேண்டும்" என்றார்.

இந்நிலையில் இதுகுறித்து விமர்சித்த டெல்லி பாஜக தலைவர் வீரேந்திர சச்தேவா, "அவர் மனநல பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். ஊழல், குழப்பம், திறமையின்மை ஆகியவற்றிற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டால் மட்டுமே அவர் பெற முடியும்.

மக்கள் அவரை நிராகரித்துவிட்டனர். கெஜ்ரிவால் நோபல் பரிசு பற்றி பேசினால், நீங்கள் சிரித்துக்கொண்டே கேட்க வேண்டும்" என்று கூறினார்.



## கழக உலகக் கிண்ணம்:

# வெளியேற்றப்பட்டது றியல் மட்ரிட்

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கழக உலகக் கிண்ணத் தொடரிலிருந்து ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் வெளியேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவில் வியாழக்கிழமை (10) அதிகாலை நடைபெற்ற பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனுடனான அரையிறுதிப் போட்டியில் 0-4 என்ற கோல் கணக்கில் தோற்றே தொடரிலிருந்து மட்ரிட் வெளியேற்றப்பட்டுள்ளது.

பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாக பேபியன் ருய்ஸ் இரண்டு கோல்களையும், உஸ்மான் டெம்பிலி, கொன்கலோ றாமோஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.



# விம்பிள்டன்: வெளியேறினார் அன்ட்றீவா

விம்பிள்டன் டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் ஏழாம் நிலை வீராங்கனையான மிர்ரா அன்ட்றீவா வெளியேற்றப்பட்டுள்ளார்.

புதன்கிழமை (09) நடைபெற்ற தனது காலிறுதிப் போட்டியில் சுவிற்ஸர்லாந்தின் பெலிந்தா பென்சிச்சை எதிர்கொண்ட ரஷ்யாவின் அன்ட்றீவா, 6-7 (3-7), 6-7 (2-7) என்ற செட் கணக்கில் தோற்றே தொடரிலிருந்து வெளியேறினார்.

## பங்களாதேஷ் தொடர் ஒத்திவைக்கப்பட்டதையடுத்து

# இலங்கை வரும் இந்தியா?

இவ்வாண்டு ஓகஸ்டில் குறுகிய மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளை உள்ளடக்கிய தொடரொன்றை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் இலங்கை கிரிக்கெட் சபை கோரியுள்ளது.

பங்களாதேஷுக்கான இந்தியாவின் சுற்றுப்பயணம் ஒத்திவைக்கப்பட்டதையடுத்தே இந்த முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு உத்தியோகபூர்வமாகா இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இன்னும் பதிலளிக்கவில்லை.


மூன்று ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், மூன்று இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளை உள்ளடக்கிய தொடரையே இலங்கை கிரிக்கெட் சபை முன்மொழிந்திருந்தது.

ஆசியக் கிண்ணத் தொடரைப் பொறுத்தே இத்தொடர் அமையவுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்திய அணி வீரர்கள், தலைமைப் பயிற்றுவிப்பாளர் கௌதம் கம்பீர், தலைமைத் தேர்வாளர் அஜித் அகர்கருடன் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் தேவஜித் சைகியா கலந்துரையாடிய பின்னரே இலங்கை கிரிக்கெட் சபைக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பதிலளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.




## துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில்

# முதலாமிடத்துக்கு முன்னேறிய ப்றூக்



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் முதலாமிடத்துக்கு இங்கிலாந்தின் ஹரி ப்றூக் முன்னேறியுள்ளார்.

இந்தியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 181 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே தரவரிசையில் இரண்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தை அடைந்துள்ளார். இப்போட்டியில் 430 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் அணித்தலைவர் ஷுப்மன் கில் 21ஆம் இடத்திலிருந்து 15 இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை, குறித்த போட்டியில் 272 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்தின் ஜேமி ஸ்மித், 26ஆம் இடத்திலிருந்து 16 இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார். முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு, 1.ஹரி ப்றூக், 2.ஜோ றூட், 3.கேன் வில்லியம்சன், 4.யஷஸ்வி ஜைஸ்வால், 5.ஸ்டீவ் ஸ்மித், 6.ஷுப்மன் கில், 7.தெம்பா பவுமா, 8.றிஷப் பண்ட், 9. கமிந்து மென்டிஸ், 10.ஜேமி ஸ்மித்.

சிம்பாப்வேக்கெதிரனா 2ஆவது டெஸ்டில் 367 ஓட்டங்களைப் பெற்றதுடன், 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய தென்னாபிரிக்காவின் வியான் முல்டர், சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் 15ஆம் இடத்திலிருந்து 12 இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை, 1.இரவீந்திர ஜடேஜா, 2.மெஹிடி ஹஸன் மிராஸ், 3.வியான் முல்டர், 4.மார்கோ ஜன்சன், 5.பற் கமின்ஸ்.
முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை, 1.ஜஸ்பிரிட் பும்ரா, 2.ககிஸோ றபாடா, 3.பற் கமின்ஸ், 4.ஜொஷ் ஹேசில்வூட், 5.நொமன் அலி, 6.மற் ஹென்றி, 7.நேதன் லையன், 8.மார்கோ ஜன்சன், 9.ஜேடன் சியல்ஸ், 10.மிற்செல் ஸ்டார்க்.

இதேவேளை, பங்களாதேஷுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் 170 ஓட்டங்களைப் பெற்ற இலங்கையணியின் தலைவரான சரித் அசலங்க, எட்டாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தை துடுப்பாட்டவரிசையில் அடைந்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 11, ஜூலை 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.